isentia
AUTHOR: No author available SECTION: NEWS PAGE: 3 PRINTED SIZE: 297.00cmï¿½ REGION: KL
MARKET: Malaysia PHOTO: Full Color ASR: MYR 3,456.00 ITEM ID: MY0064438921



05 JUL, 2025

# Electricity tariff review won't affect university students - TNB

Malaysian Nanban, Malaysia

## புதிய மின்கட்டண சீராய்வு

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு எந்த பாதிப்பையும் கொண்டு வராது



கோலாலம்பூர், ஜூலை 5- கடந்த செவ்வாய்க்கிழமை முதல் நடப்புக்கு வந்துள்ள புதிய மின்கட்டண சீராய்வினால் எழும் எந்த ஒரு கட்டணம் உயர்வும் பல்கலைக்கழக மாணவர்களை பாதிக்காது என்று தெனாகா நேஷனல் பெர்ஹாட் அறிவித்துள்ளது.

நாட்டில் உள்ள 2 கோடியே 30 லட்சம் உள்நாட்டு பயனீட்டாளர்களில் ஓர் அங்கமாக விளங்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் எந்த வகையிலும் இது பாதிப்பை கொண்டு வராது. இந்த மாணவர்கள் வாடகை தங்கு அறைகளில் இருந்தாலும் தங்கும் வசதிகளுடன் கூடிய கல்லூரிகளில் இருந்தாலும் அவர்களுக்கு எந்த ஒரு மின் கட்டண உயர்வும் வராது என்றார் அவர்.

மேலும் அவர்களுக்கான கட்டண கழிவும் மின் சேமிப்பு சலுகைகளும் வழங்கப்படும் என்று அந்நிறுவனம் தெரிவித்தது.

இந்த புதிய மின்கட்டண சீராய்வின் வழி மின்சாரத்தை பயன்படுத்துகின்ற நேரம் அதன் பயனீட்டாளர்கள், மாணவர்கள் உட்பட அனைவருக்கும் அக்கட்டணம் குறைவாகவே இருப்பதை உறுதி செய்யும் என்று அது கூறியது.

துணி துவைக்கும் இயந்திரம், மின் குளிரூட்டிகள், கணினிகள் போன்றவற்றை உச்ச நேரம் இல்லாத வேளைகளில் பயன்படுத்துகின்ற போது இயல்பாகவே அதற்கான கட்டணம் குறைவாகவே இருக்கும்.

பொது மற்றும் தனியார் உயர் கல்வி கூடங்களுக்கு குறைவான மின் கட்டணத்தை வழங்குகிறோம். அதே போல 10% கட்டண சலுகையும் வழங்கப்படுகிறது என்றும் அந்த அறிக்கை தெரிவித்தது.

இதைத்தவிர சமூக நல இல்லங்கள் வழிபாட்டுத் தலங்களுக்கு இந்த கட்டண சலுகை வழங்கப்படுகின்றன. நாட்டில் ஆயிரம் கிலோ வாட்ஸ்க்கும் குறைவான மின்சாரத்தை பயன்படுத்தும் பொது மக்களுக்கு எந்த கட்டண உயர்வும் இருக்காது. வழக்கம் போல அவர்களின் பயனீட்டுக்கு ஏற்ப அந்த கட்டணங்கள் குறைவாகவே இருக்கும் என்று அந்த அறிக்கை தெரிவித்தது.

Provided for client's internal research purposes only. May not be further copied, distributed, sold or published in any form without the prior consent of the copyright owner.